# நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர்!

## நேற்று முன்தினம் (20.08.2025) நிகழ்வுகள்!



**1. மாற்றுத் திறனாளிகளுக்கான வேலை வாய்ப்புக்கு ஒன்றிய அரசு செய்தது என்ன?**

**கனிமொழி கருணாநிதி கேள்வி!**



மாற்றுத் திறனாளிகளுக்கான திறன் மேம்பாடு- வேலை வாய்ப்புகள் குறித்து திமுகதுணைப்பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. மக்களவையில் ஆகஸ்டு 19 ஆம் தேதி, எழுத்துபூர்வமாக கேள்விகளை எழுப்பினார்.

"மாற்றுத்திறனாளிகளின் திறன் மேம்பாட்டுக்கான தேசிய செயல் திட்டத்தின் விவரங்கள் (NAP-SDP) என்ன? இத்திட்டத்தின் நோக்கங்கள் மற்றும் முக்கிய கூறுகள் யாவை?

இந்தத் திட்டத்தின் கீழ் மாற்றுத் திறனாளிகளுக்கான தொழில் பயிற்சி மையங்களை அரசாங்கம் நிறுவியுள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள், தமிழ்நாடு உட்பட மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்கள் வாரியாக என்ன?

மாற்றுத் திறனாளிகளுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தொழில் பயிற்சியை முடித்த பிறகு, மாற்றுத்திறனாளிகள் அரசு மற்றும் தனியார் துறைகளில் வேலைவாய்ப்பைப் பெறுவதை உறுதி செய்ய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

இந்தத் திட்டத்தின் கீழ் பயிற்சி பெற்ற மாற்றுத்திறனாளிகளை பணியமர்த்துவதில் தனியார் துறை பங்கேற்பை ஊக்குவிக்க ஏதேனும் சிறப்பு சலுகைகள் அல்லது திட்டங்கள் உள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?" ஆகிய கேள்விகளை கனிமொழி கருணாநிதி எம்பி. எழுப்பினார்.

**2. அடிப்படை வசதிகள் இல்லாத இரயில் நிலையங்களை சரி செய்வது எப்போது?**



**ஆ.இராசா எம்.பி. கேள்வி**

இரயில் நிலையங்களில் காத்திருப்பு அறைகள், கழிப்பறைகள், குடிநீர் வசதி, கேட்டரிங் சேவைகள் போன்ற அடிப்படை வசதிகளை உருவாக்கும் 'ஆதர்ஷ்' திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மேம்பாட்டுப் பணிகள் குறித்து நாடாளுமன்றத்தில் திமுக துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா கேள்வி எழுப்பியுள்ளார்.

நடப்பு ஆண்டில் திறக்கப்பட்ட அல்லது திறப்பு விழாவிற்குத் தயாராக உள்ள ஆதர்ஷ் நிலையங்களின் எண்ணிக்கை என்ன? அதிகரித்து வரும் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, இந்தத் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் மேலும் நிலையங்களைச் சேர்க்க அரசாங்கத்திடம் உள்ள திட்டம் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

**3. பொது இடங்களில் மாற்றுத் திறனாளிகள் வசதியாக புழங்குவதற்கான நடவடிக்கை என்ன?**

**திருச்சி சிவா கேள்வி!**



பொது போக்குவரத்து, அரசு கட்டிடங்கள் முதலியவை மாற்றுத் திறனாளி கள் புழங்குவதற் கான தடையற்ற சூழலை உருவாக்க மேற்கொள்ளப்பட்ட எஸ்.பி.ஏ- 2015 பிரச்சார திட்டத்தின்கீழ் இதுவரை செய்யப்பட்ட மாற்றங்கள் என்ன என்று திமுக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா கேள்வி எழுப்பியுள்ளார். இத்திட்டம் முறையாக இலக்கை அடைந்திருக்கிறதா? திட்டத்தின் வெற்றியை மதிப்பிடுவதற்கு அரசு எடுத்த ஆய்வு நடவடிக்கைகள் என்ன? தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட மானியங்கள் எவ்வளவு மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான தடையற்ற சூழலை உருவாக்கும் துணைத் திட்டத்தின்கீழ் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் பற்றிய விவரங்கள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

**4. தர்மபுரியின் கிராமங்களுக்கு அதிவேக இணைய வசதி நடவடிக்கை குறித்து கேள்வி எழுப்பிய**

**தருமபுரி அ.மணி**



கிராமப்புற மற்றும் தொலைதூரப் பகுதிகளில் அதிவேக இணை யம் மற்றும் டிஜிட்டல் உள்கட்டமைப்பை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட தேசிய அகல அலைவரிசை இயக்கத்தின்(NBM) செயல்பாடுகள் குறித்து திமுக மக்களவை உறுப்பினர் அ. மணி கேள்வி எழுப்பியுள்ளார்.

தர்மபுரி மக்களவைத் தொகுதியில் NBM இன் கீழ் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை? NBM இன் கீழ் தர்மபுரியின் அனைத்து கிராமங்கள் மற்றும் குக்கிராமங்களிலும் உலகளாவிய அகல அலைவரிசை கிடைக்கச் செய்ய எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை? தர்மபுரியின் பின்தங்கிய மற்றும் பழங்குடியின தொகுதிகளில் டிஜிட்டல் இடைவெளியை குறைக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள், மலிவு விலையில் இணையம், டிஜிட்டல் சாதனங்கள் வழங்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

**5. நிதிப் பகிர்வில் தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசு**

**பி.வில்சன் காட்டம்!**



பிரதமர் மீன்வளத் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசுக்கும் மாநிலங்களுக்கும் இடையிலான உண்மையான செலவுப் பகிர்வு முறை 60:40 என்ற விகிதத்தில் இருக்க வேண்டும் ஆனால் தமிழ்நாடு திட்ட செலவில் 73 சதவீதம் வரை ஏற்பது ஏன் என்று திமுக மாநிலங்கலவை உறுப்பினர் பி. வில்சன் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த மூன்று ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட, வெளியிடப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள் என்ன? மாநிலங்கள் மீதான அதிகரித்து வரும் நிதிச் சுமையைக் கருத்தில் கொண்டு ஒன்றிய அரசு முறையான நிதிப்பகிர்வை பின்பற்ற வேண்டி தமிழ்நாட்டின் கோரிக்கையை இன்னும் பரிசீலிக்காதது ஏன் என்றும் அவர் கேட்டுள்ளார்.

**6. கள்ளச் சந்தையில் விற்கப்படும் அத்தியாவசிய பொருட்கள் தடுப்பு நடவடிக்கை என்ன?**



**பொள்ளாச்சி ஈஸ்வரசாமி கேள்வி**

அத்தியாவசியப் பொருட்களை கள்ளச் சந்தையில்விற்பதைத் தடுக்க கடந்த ஐந்து ஆண்டுகளில் நடத்தப்பட்ட சோதனைகள் எத்தனை என திமுக மக்களவை உறுப்பினர் ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பியுள்ளார். சோதனைகளின் போது கைப்பற்றப்பட்ட கோதுமை, சர்க்கரை, அரிசி மற்றும் பிற பொருட்களின் அளவுகள் மற்றும் கைது செய்யப்பட்ட நபர்களின் விவரங்கள் என்ன என்றும் அவர் கேட்டுள்ளார்.

**7. முறையாக செயல்படுகின்றனவா பொது சேவை மையங்கள்?**



**கள்ளக்குறிச்சி மலையரசன் கேள்வி**

தமிழ்நாட்டில் செயல்படும் பொது சேவை மையங்களின் எண்ணிக்கை மற்றும் செயல்பாடுகள் குறித்து கள்ளக்குறிச்சி திமுக மக்களவை உறுப்பினர் மலையரசன் கேள்வி எழுப்பியுள்ளார்.

கிராமப்புற மற்றும் இரண்டாம் கட்ட நகர்ப்புறங்களில் பொது சேவை மையங்கள் மூலம் தற்போது வழங்கப்படும் அரசு மற்றும் தனியார் சேவைகளின் விவரங்கள் என்ன? தமிழ்நாட்டில் பொது சேவை மையங்களால் வழங்கப்படும் சேவை தரம் மற்றும் டிஜிட்டல் கல்வியறிவு ஊக்குவிப்பு குறித்து அரசு நடத்தியுள்ள மதிப்பாய்வுகளின் முடிவுகள் என்ன? பொது சேவை மைய உள்கட்டமைப்பை வலுப்படுத்தவும் மக்களிடம் விழிப்புணர்வை அதிகரிக்கவும், பொது சேவை மையங்களை நடத்தும் கிராம அளவிலான தொழில்முனைவோரின் (VLE) நிதி நம்பகத்தன்மையை உறுதி செய்யவும் அரசாங்கம் எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன? மற்றும் தமிழ்நாட்டின் தொலைதூர மற்றும் பழங்குடிப் பகுதிகளில் உள்ள பொது சேவை மையங்கள் முழுமையாக செயல்படுவதையும் டிஜிட்டல் முறையில் பொருத்தப்பட்டிருப்பதையும் உறுதி செய்ய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட குறிப்பிட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன? எனும் பல்வேறு கேள்விகளை அவர் கேட்டுள்ளார்.

**8. தமிழ்நாட்டில் உள்ள அனல் மின் நிலையங்களுக்கு நிலக்கரி ஒதுக்கீடு பிரச்சினைகளை சரி செய்ய நடவடிக்கை என்ன?**

**தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி**



ஏப்ரல் 2024 முதல்ஜூலை 2025 வரை தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு அனல் மின் நிலையத்திற்கும் ஒதுக்கப்பட்ட நிலக்கரி அளவு மற்றும் கையிருப்பு குறித்து திமுக மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பியுள்ளார். மின் நிலையங்களுக்கு தடையற்ற நிலக்கரி போக்குவரத்தை உறுதி செய்வதற்காக ரயில் ரேக்குகள் போன்ற கூடுதல் தளவாடங்களை வழங்க தமிழ்நாடு மின் உற்பத்தி கார்ப்பரேஷன் லிமிடெட் (TNPGCL) விடுத்த கோரிக்கைக்கு மத்திய அரசின் பதில் என்ன? நிலக்கரி ஒதுக்கீட்டை சரிசெய்தல் மற்றும் நிலக்கரி தரத்தை மேம்படுத்த தமிழ்நாடு விடுத்த கோரிக்கைக்கு மத்திய அரசின் பதில் என்ன? கடந்த ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்நாட்டு நிலக்கரி தரத்தால் ஆலை வாரியாக தமிழ்நாடு எதிர்கொண்ட பிரச்சினைகளின் விவரங்கள் குறித்தும் அவர் விரிவான பதில் வேண்டி கேள்வி எழுப்பியுள்ளார்.

**9. கிடப்பில் போடப்பட்டுள்ளதா புதுப் பாலங்களுக்கான கோரிக்கை?**

**ஆரணி தரணிவேந்தன் கேள்வி**



கடந்த ஐந்து ஆண்டுகளில் தமிழ்நாட்டில் முன்மொழியப்பட்ட மேம்பாலங்கள் மற்றும் தரைப்பாலங்கள் குறித்து திமுக மக்களவை உறுப்பினர் தரணிவேந்தன் கேள்வி எழுப்பியுள்ளார். இதில் அனுமதி வழங்கப்பட்டவை மற்றும் கட்டுமானத்தில் உள்ளவை எத்தனை? மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் செலவுப் பகிர்வு உட்பட இந்தத் திட்டங்களுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட நிதி முறை என்ன? நிலம் கையகப்படுத்துதல், வடிவமைப்பு ஒப்புதல்கள்/ மாநில நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பு சிக்கல்கள் காரணமாக பாலங்கள் கட்டுமானத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளதா? நிலுவையில் உள்ள பணிகளை விரைவுபடுத்தவும், குறிப்பாக அதிக போக்குவரத்து மண்டலங்களில் பாதுகாப்பான மற்றும் நெரிசல் இல்லாத ரயில்-சாலை க்ராஸிங்களை உறுதி செய்யவும் அரசு எடுத்துள்ள/எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன? என்று அவர் கேட்டுள்ளார்.

**10. தேசிய நெடுஞ்சாலைகளில் மின்சார வாகன சார்ஜிங் நிலையங்கள் அமைக்கும் திட்டங்களில் தற்போதைய நிலை என்ன?**

**கே.ஆர்.என்.ராஜேஷ்குமார் கேள்வி**



தேசிய நெடுஞ்சாலைகளில் மின்சார வாகன (EV) சார்ஜிங் நிலையங்கள் அமைப்பது குறித்து திமுக மாநிலங்கலவை உறுப்பினர் கே.ஆர்.என். ராஜேஷ்குமார் கேள்வி எழுப்பியுள்ளார். அதில் அவர் இதுவரை முடிவுசெய்யப்பட்டுள்ளநிலையங்களின் எண்ணிக்கை, 2025-26 ஆம் ஆண்டுக்கான இலக்குகள் மற்றும் சார்ஜிங் நிலையங்களில் சீரான விநியோகம், தரம் மேம்பாடு போன்ற பல்வேறு அம்சங்கள் குறித்தும் கேட்டுள்ளார்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று முன்தினம் (20.08.2025) செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ரூ.66.78 கோடி மதிப்பீட்டில், மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது வரிசை குடிநீர் குழாய் பரிசோதனை ஓட்டத்தினை ஆய்வு செய்தார். இவ்வாய்வின்போது, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு. மகேஷ் குமார், சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் கௌரவ் குமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் திருமதி.ரா.சரண்யா, சென்னை குடிநீர் வாரியத்தின் பொறியியல் இயக்குநர்(பொ) திருமதி. டி.மைதிலி, நகராட்சி தலைவர்கள். நகராட்சி ஆணையர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### சைதாப்பேட்டை தாடண்டர் நகர் – மாம்பலம் கால்வாயில்

# நீர்நிலைகளை தூர்வாரும் பணிக்கான இயந்திரங்கள்!

## அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்தார்!

சென்னை, ஆக. 22-

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே. என். நேரு அவர்கள், நேற்று முன்தினம் (20.08.2025) பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், சைதாப்பேட்டை தாடண்டர் நகர் அருகில் உள்ள மாம்பலம் கால்வாயில் நீர்நிலைகளைத் தூர்வாரும் பணிக்காக ரூபாய் 7.43 கோடி மதிப்பீட்டில் மூன்று புதிய ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் இயந்திரங்களை பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்துப் பார்வையிட்டார்.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மழை வெள்ள பாதிப்புகளை தடுக்கும் வகையில், நீர்வழிக்கால்வாய்களில் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியால் 81 கி.மீ. நீளம் கொண்ட 44 நீர்வழிக்கால்வாய்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. பருவமழைக்காலங்களில் இந்த நீர்வழிக்கால்வாய்களில் மழைநீர் சீராகச் செல்லும் வகையில், 2 ஆம்பிபியன், 3 மினி ஆம்பிபியன், 6 ரொபோடிக் எஸ்கவேட்டர் இயந்திரங்கள் மூலம் சுழற்சி முறையில் தூர்வாரும் பணி மற்றும் மிதக்கும் கழிவுகளை அகற்றும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்படும் பெரிய மற்றும் சிறிய வகையிலான கால்வாய், குளம் மற்றும் ஏரி ஆகிய நீர்நிலைகளில் படிந்துள்ள சேறு, சகதி, மிதக்கும் தாவரங்கள். கழிவுப் பொருட்கள் மற்றும் பிற மிதக்கும் பொருட்களை அகற்றி சுத்தப்படுத்துவதற்கு புதிதாக மூன்று ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் (Amphibious Excavator Equipment) இயந்திரங்களை ரூ.7.43 கோடி மதிப்பீட்டில் (ஒன்றின் விலை ரூ.2,47,55,220/-) கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் முதல் முறையாக இவ்வகை இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதன் சிறப்பம்சமானது இந்த உபகரணம் நீரிலும், நிலத்திலும் இயங்கக் கூடியதாகும்.

இந்த உபகரணங்கள் நீர்நிலைகளில் தூர்வாருவது மட்டும் அல்லாமல் நிலப்பரப்பில் பள்ளம் தோண்டுதல் உள்ளிட்ட நிலத்தைச் சீரமைக்கும் பல்வேறு பணிகளையும் மேற்கொள்ளும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனைத் தொடர்ந்து, அண்ணா நகர் கிழக்கு பிளாக, எச்.1 மூன்றாவது அவென்யூவில், ரூபாய் 62 கோடி மதிப்பீட்டில், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு கழகத்தின் (TNUIFSL) புதிய அலுவலகக் கட்டடத்தினை நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

இக்கட்டடம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தில் இருந்து ரூபாய் 62 கோடியில் வாங்கப்பட்டுள்ளது 35400 சதுர அடிகள் பரப்பளவில் தரைத் தளம் மற்றும் நான்கு தளங்களுடன் இக்கட்டடம் அமைந்துள்ளது.

தரைத் தளத்தில் வாகனங்கள் நிறுத்துமிடம், முதல் தளத்தில் நான் முதல்வன் அலுவலகம், இரண்டாம் மற்றும் மூன்றாம் தளத்தில் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு கழகத்தின் அலுவலகம், நான்காம் தளத்தில் சென்னை நதிகள் புனரமைப்பு நிறுவனம் லிமிடெட் அலுவலகம் அமைந்துள்ளன.

இந்நிகழ்வில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், அண்ணா நகர் சட்டமன்ற உறுப்பினர் எம்.கே. மோகன், மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ் குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா.கார்த்திகேயன், தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத் தலைவர், ராஜேந்திர ரத்னூ, மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு கழகம், மேலாண்மை இயக்குநர், ஹனிஷ் சாப்ரா, சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர், டாக்டர் டி.ஜி.வினய், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், மரு. ஜி.எஸ்.சமீரன், நகராட்சி நிர்வாக இயக்குநர், பி.மதுசூதன் ரெட்டி, பேரூராட்சிகளின் இயக்குநர், எம்.பிரதீப் குமார், துணை ஆணையர்கள் வி. சிவகிருஷ்ண மூர்த்தி, (பணிகள்), அஃதாப் ரசூல், (தெற்கு வட்டாரம்), எச். ஆர். கௌஷிக் குமார், (மத்திய வட்டாரம்), மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந. ராமலிங்கம், அடையாறு மண்டலக் குழுத் தலைவர் ஆர். துரைராஜ் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாதிரி தொழில் மையங்கள் மூலம்

# தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு பெற்றவர்கள் எத்தனை பேர்?

## மக்களவையில் – சி.என்.அண்ணாதுரை கேள்வி!



புதுடெல்லி, ஆக. 22-

ஒன்றிய அரசின் மாதிரி தொழில் மையங்கள் மூலம் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு முகாம்கள் எவ்வளவு நடந்துள்ளன; வேலைவாய்ப்பு பெற்றவர்கள் எவ்வளவு பேர் என்று மக்களவையில் திருவண்ணாமலை தொகுதி உறுப்பினர் சி.என். அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வருமாறு:

(அ) தமிழ்நாட்டில் தேசிய தொழில் சேவை (NCS) திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட மாதிரி தொழில் மையங்களின் (MCCs) எண்ணிக்கையின் விவரங்கள்:

(ஆ) தமிழ்நாட்டில் வேலை தேடுபவர்களுக்கு இந்த MCCக்கள் வழங்கும் நோக்கங்கள் மற்றும் முக்கிய சேவைகளின் விவரங்கள்.

(இ) கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டில் MCCகள் மூலம் பதிவு செய்யப்பட்டு பணியமர்த்தப்பட்ட மொத்த வேலை தேடுபவர்களின் விவரங்கள் குறிப்பிடவும்.

இந்த மையங்களில் அரசு தொழில் ஆலோசனை மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களைத் தொடர்ந்து ஏற்பாடு செய்கிறதா அப்படியானால் கிராமப்புற மற்றும் அரை நகர்ப்புறப் பகுதிகளில் அதன் விவரங்கள் தெரிவிக்கவும்.

2023-24 மற்றும் 2024-25 நிதியாண்டில் தமிழ்நாட்டில் மாதிரி தொழில் மையங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட வேலை வாய்ப்பு முகாம்கள் அல்லது வேலைவாய்ப்பு இயக்கங்களின் எண்ணிக்கையின் விவரங்கள் தருக.

(ஊ) இந்த நிகழ்வுகள் மூலம் வேலை வாய்ப்புகளைப் பெற்ற வேட்பாளர்களின் எண்ணிக்கையின் விவரங்கள் தருக.

(எ) மேற்கூறிய வேலை வாய்ப்பு முகாம்களில் பெண்கள் மற்றும் விளிம்புநிலை குழுக்களின் பங்கேற்பை அதிகரிக்க அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்விகள் கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய தொழிலாளர் - வேலைவாய்ப்பு இணை அமைச்சர் பதிலளித்தார்.

### தி.மு.க. மாணவர் அணி சார்பில்

# மாநிலக் கல்விக் கொள்கையின் சிறப்புகள் குறித்த கருத்தரங்கம்!

**தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி அறிவிப்பு!**

முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் உத்தரவுப்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதலின் பேரில் தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள மாநிலக் கல்விக் கொள்கையின் சிறப்புகளையும் - தேசியக் கல்விக் கொள்கையின் தீமைகளையும் மாணவர்களிடையே எடுத்துச் செல்லும் நோக்கில் சென்னை "அண்ணா நூற்றாண்டு நூலக அரங்கில்" ஆகஸ்ட் 23 ஆம் தேதி, மாலை 4 மணிக்கு "எங்கள் கல்வி எங்கள் உரிமை" என்ற தலைப்பில் "கருத்தரங்கம்" நடைபெறவுள்ளது.

தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி தலைமையில் மாநிலத் துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா.தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், வி.ஜி.கோகுல், திருமதி பூர்ணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில்,

தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களும் - மக்கள் நீதி மய்யத் தலைவர் - மாநிலங்களவை உறுப்பினர் உயர்திரு கமல்ஹாசன் அவர்களும் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

இந்தக் கருத்தரங்கில் கழக மாவட்ட, மாநகர ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழக மாணவர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ள வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 20.08.2025

**இரா. ராஜீவ்காந்தி**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி.



ஈரோடு அசோகபுரத்தில் உள்ள சி.எச். 22. தமிழ்நாடு கூட்டுறவு துணி நூல் பதனிடும் ஆலையின் பொதுப் பேரவை கூட்டத்தில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். நிகழ்வில் கைத்தறி மற்றும் துணி நூல் துறை உதவி இயக்குனர் சரவணன், மேலாண் இயக்குனர் சிவக்குமார், ஏ.டி.சாரதா, துணை மேயர் வி.செல்வராஜ், மண்டல தலைவர் ப.க.பழனிச்சாமி, மாநகர கழகச் செயலாளர் மு.சுப்ரமணியம், ளளபகுதி கழகச் செயலாளர் வி.சி.நடராஜன், மாமன்ற உறுப்பினர் புனிதா சக்திவேல், சம்பத்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம், 44 வார்டுக்குட்பட்ட சாய்பாபா காலனி, கே.கே.புதூர் பகுதியில், 'தாயுமானவர்' திட்டத்தின் கீழ் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் இல்லங்களுக்கு மாநகராட்சி மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன் நேரில் சென்று ரேசன் பொருட்களை வழங்கினார். இதில் மாநகராட்சி ஆணையாளர் மா.சிவகுருபிரபாகரன், மாவட்ட வருவாய் அலுவலர் டாக்டர். மோ.ஷர்மிளா, மாநகராட்சி துணைமேயர் ரா.வெற்றிச் செல்வன், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் அழகிரி, மாவட்ட வழங்கல் அலுவலர் விஸ்வநாதன், மாமன்ற உறுப்பினர்கள் டாக்டர் ஆர்.காயத்ரி, பேபி சுதா மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.